**செ. கு. எண்**: 336 **நாள்**: 13.09.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

இரங்கல் செய்தி – 13.9.2012

சுதந்திரப் போராட்ட தியாகியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவருமான தோழர் திரு. A.M.கோபு அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக இன்று (13.9.2012) காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் வருத்தமுற்றேன்.

தோழர் திரு. A.M.கோபு அவர்கள் இந்திய விடுதலைக்காக சுதந்திரப் போராட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுப்படுத்திக் கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக போராடி சிறை சென்றவர். சிறந்த தொழிற்சங்கவாதியான இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழுவின் உறுப்பினராகவும், தமிழ்நாடு AITUC-யின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தோழர் திரு. A.M.கோபு அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களுக்கும், தொழிற்சங்கத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**